முதலாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்,
இராணிப்பேட்டை.

**முன்னிலை : திரு.M. செல்வம், M.L.,**
முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி, (மு.கூ.பொ)
இராணிப்பேட்டை.

2024 ம் வருடம் ஏப்ரல் திங்கள் 29 ஆம் நாள் திங்கள்கிழமை

அ.வ.எண்.89/2023

(CNR No.TNVL120008322023)

C. ஜெயபாலன், வயது 67, த/பெ. சந்திரமகாதேவ நாட்டார், இந்து, கதவு எண்.1/153, பிள்ளையார் கோயில் தெரு, நந்தியாலம் கிராமம், வாலாஜா தாலுக்கா, வேலூர் மாவட்டம். ... வாதி

/எதிர்/

பூசா, வயது 57, க/பெ.மாசிலாமணி கவுண்டர், கதவு எண்.1/76/362, மேட்டுத் தெரு, பூஞ்சோலை நகர், நந்தியாலம் மதுரா கிராமம், வாலாஜா தாலுக்கா – 632 517, இராணிப்பேட்டை மாவட்டம். ...பிரதிவாதி.

30.09.2017 ஆம் தேதியிட்ட கிரைய ஒப்பந்தத்தை அனுசரித்து ஏற்றதை ஆற்றுதல் பரிகாரம் கோரியும் (அல்லது) மாற்று பரிகாரமாக பிரதிவாதி ரூ.7,00,000/– த்தை வட்டியுடன் வாதிக்கு திருப்பி செலுத்தவும், நிரந்தர உறுத்துக்கட்டளை கோரியும் மற்றும் இவ்வழக்கு செலவுத் தொகை கோரியும் வாதியால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தாவா தாக்கல் செய்யப்பட்ட நாள் : 22.09.2023 மற்றும்
07.10.2023
தாவா கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள் : 10.10.2023.

வழக்கின் மொத்த மதிப்பு ரூ.9,00,000/- + ரூ.1,000/- நீதிமன்ற கட்டணமாக ரூ.27,000/- + ரூ.30/- செலுத்தப்பட்டுள்ளது. மாற்று பரிகாரம் ரூ.7,00,000/- த்திற்கு வட்டியுடன் சேர்ந்து ரூ.10,04,265/-க்கு நீதிமன்ற கட்டணம் ரூ.30,128/- செலுத்தப்பட்டுள்ளது. (Court fee paid under Section 42(a), 22 and 27(c) of TNCF Act)

இவ்வழக்கிற்கு வழக்கு மூலம் 30.09.2017, 12.01.2018, 05.09.2023, 07.09.2023 மற்றும் 12.09.2023ம் தேதிகளில் ஆற்காடு சார்பதிவாளர் அலுவலகத்தில் ஏற்பட்டது.

இந்த வழக்கு 15.04.2024 அன்று என் முன்பு இறுதி விசாரணைக்கு வந்து வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.S.S. தர்மராஜ் அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதி தரப்பில் எதிர் வழக்குரை தாக்கல் செய்யாததால் தோன்றா தரப்பினராக கருதப்பட்டு, வாதி தரப்பு வாதங்களை கேட்டும், சாட்சிய சான்றாவணங்களை பரிசீலனை செய்தும், இது நாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்தும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

<u>தீர்ப்பாணை</u>

1. வாதி நீதிமன்றத்தில் வைப்பீடு செய்துள்ள பாக்கி தொகை ரூ.2,00,000/- 30.09.2017 ஆம் தேதியிட்ட வா.சா.ஆ.2 கிரைய ஒப்பந்தத்தின்படி பிரதிவாதி பெற்றுக் கொண்டு இத்தீர்ப்புரைக்கு பின்பு 3 மாதகாலத்திற்குள் வழக்கு சொத்தினை பிரதிவாதி, வாதி பெயருக்கு கிரைய பத்திரம் எழுதிக்கொடுத்து வழக்கு சொத்தின் சுவாதீனம் ஒப்படைக்கப்படவேண்டும் என்று ஏற்றதை ஆற்றுதல் பரிகாரம் வழங்கியும், தவறும் பட்சத்தில் நீதிமன்றமே வாதியின் செலவில் வாதியின் பெயரில் கிரையப்பத்திரம் எழுதிக் கொடுத்து வழக்கு

சொத்தின் சுவாதீனத்தை வாதி வசம் ஒப்படைக்கப்படவேண்டும் என்று தீர்ப்பாணை பிறப்பிக்கப்படுகிறது.

2. வாதி, தாவாவில் கோரிய மாற்று பரிகாரம் மற்றும் இதர பரிகாரங்கள் பொறுத்து வழக்கு தள்ளுபடி செய்யப்படுகிறது.

3. பிரதிவாதி, வாதிக்கு வழக்கு செலவுத்தொகை ரூ.39,283/- செலுத்தவேண்டும். (The plaintiff has not filed cost memo, hence institution fee only)

## SCHEDULE OF PROPERTY

வேலூர் மாவட்டம், வாலாஜா வட்டம், அரக்கோணம் பதிவு மாவட்டம், ஆற்காடு சார்பதிவைச் சேர்ந்த நந்தியாலம் கிராமத்தில், சர்க்கார் நஞ்சை சர்வே எண்கள் 274/5A. 0.68.0 ஏர்ஸ்க்கு பூரா விஸ்தீரணம் ஏக்கர் 1.68 செண்ட்டிற்கு தீர்வை ரூ.10.50 பைசா.

268/1B 0.02.5 ஏர்ஸ்க்கு பூரா விஸ்தீரணம் ஏக்கர் 0.06 செண்ட்டில் பொதுவில் 3ல் 1 பாகம் 0.02 செண்ட்டிற்கு தீர்வை ரூ.0.14 பைசா.

ஆக ஏக்கர் 1.70 (ஒரு ஏக்கர் எழுபது செண்ட்) உள்ள நிலமும்,

மேற்படி சர்வே எண்.268/1B இல் இருக்கும் கிணர் ஒன்றில் பொதுவில் 3ல் 1 பாகமும் மேற்படி கிணற்றில் அமைக்கப்பட்டுள்ள 5 HP மின் மோட்டார், மின் சர்வீஸ், அதன் டிபாசிட் வகையராக்களில் பொதுவில் 3ல் 1 பாகமும்,

மேற்படி கிணற்றிலிருந்து மேற்படி நிலங்களுக்கு தண்ணீர் பாயும் மாமூல் கால்வாய் பாத்தியமும், மேற்படி நிலங்களுக்குண்டான ஏரித்தண்ணீர் பாத்தியமும் கால்வாய் மாமூல் வழி பாத்தியம் உள்படவும்

சேர்ந்து இந்த விக்கிரைய அக்ரிமெண்ட்டுக்கு உட்பட்டது. மேற்படி சொத்துக்கள் நந்தியாலம் ஊராட்சி மன்ற எல்லைக்கு உட்பட்டது. இதன் மதிப்பு ரூ.9,00,000/-.

2024ம் வருடம் ஏப்ரல் திங்கள் 29ஆம் நாள் திங்கள்கிழமை என்னுடைய கையெழுத்தும் இந்நீதிமன்ற முத்திரையும் போடப்பட்டது.

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி, (மு . கூ . பொ)
இராணிப்பேட்டை.

<u>செலவு விவரம்</u>

| | வாதி தரப்பு (Cost memo not filed) |
|---|---|
| Stamp for Plaint | Rs. 30,158.00 |
| Stamp for Power | Rs. 50.00 |
| Pleaders fee | Rs. 9,075.00 |
| Service of Process | Rs. --- |
| Preparation of Process | Rs. --- |
| Stamp on petitions | Rs. --- |
| Stamp for Judgment | Rs. --- |
| Stamp for Decree | Rs. --- |
| Cost of pre-suit notice | Rs. --- |
| Cost of Marking or Getting copies of documents such as affidavit etc. | Rs. --- |
| Paper publication Charges | Rs. --- |
| TOTAL | Rs. 39,283.00 |

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி, (மு . கூ . பொ)
இராணிப்பேட்டை.